சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.111/2020

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ம் நாள் .வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வரதராஜ் | வயது | 54 |
| த/பெ | சுப்பையன் | வட்டம் | கோயமுத்தூர் |
| விலாசம் | 1/146, காளம்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | அரசு ஊழியர் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைதொடர்ச்சி :

புல எண்.498/2 ஏ வில் தான் வண்டித் தடம் உள்ளது என்றால் வண்டித் தடம் எதுவும் இல்லை. புல எண்.498/2 ஏ யார் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ரத்தினம், நான் மற்றும் எனது மனைவி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது. வருவாய் துறை ஆவணங்களிலும் இந்த மூவர் பெயரில் தான் உள்ளதா என்றால் உள்ளது. புல எண்.498/2 ஏ விற்கு பட்டா எண்.1566 ஐ மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் வழங்கி உள்ளார் என்றால் சரி தான். புல எண்.498/2 ஏ விற்கான அந்த பட்டாவில் சாமிநாதன், ரஞ்சித்குமார், ரத்தினம் மற்றும் வள்ளியம்மாள் ஆகியோர்களின் பெயர்கள் கூட்டாக இடம் பெற்றுள்ளது என்றால் சரி தான். அவர்கள் கிரையம் பெற்ற ஆவணத்தின் கிரையம் பதிவு செய்யப்பட்ட பின்னர் மோசடியாக அந்த புல எண்ணை இடைச் செருகல் செய்து உள்ளார்கள். பொதுவாக சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த ஆவணத்தில் இடைச் செருகல் செய்ய முடியாது என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. மோசடியாக இடைச் செருகல் செய்துள்ளார்கள் என யார் மீதும் இதுவரை குற்றவியல் புகார் அளிக்க வில்லை என்றால் புகார் கொடுத்து உள்ளேன். அவ்வாறு புகார் கொடுத்தது சம்பந்தமான ஆவணங்களை தாக்கல் செய்ய வில்லை என்றால் சரி தான். ஆனால் புகார் மனு ரசீது வாங்கி உள்ளேன். நான் அவ்வாறு புகார் அளிக்க வில்லை என்றும் அவ்வாறு அளித்து இருந்தால் அந்த ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்து இருப்பேன் என்றால் சரி யல்ல. புல எண். 498/2 ஏ விற்கான

பட்டாவில் சாமிநாதன், ரஞ்சித்குமார், ரத்தினம் மற்றும் வள்ளியம்மாள் ஆகியோர்களின் பெயர்கள் கூட்டாக இடம் பெற்றுள்ள விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் நான் கிரையம் பெற்ற பின்னர் தெரியும். பட்டாவில் மேற்கண்ட நபர்களின் பெயர்கள் உள்ளது சரியானது தான் என்றால் சாமிநாதன் மற்றும் ரஞ்சித்குமார் ஆகியோர்கள் எனக்கு கிரையம் கொடுத்த நபர்கள். ரத்தினம் மற்றும் வள்ளியம்மாள் ஆகியோர்களின் பத்திரங்கள் தாவா புல எண் இடைச் செருகலாக உள்ளதால் அந்த பட்டா சரியானது அல்ல. அந்த பட்டா சரியானது என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. புல எண்.498/2 ஏ ல் நானும் ஒரு பாகஸ்தர் என்றால் சரி தான். புல எண்.498/2 ஏ ல் என்னுடைய பெயரை சேர்ப்பதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றால் என்னுடைய பெயரும் சேர்க்கப் பட்டுள்ளது. தற்சமயம் புல எண்.498/2 ஏ விற்கான பட்டாவில் யார் பெயர் இடம் பெற்றுள்ளது என்றால் என் பெயரும் என் மனைவியான ஜெயபாரதி பெயரிலும் ரத்தினம், சாமிநாதன், ரஞ்சித்குமார் மற்றும் வள்ளியம்மாள் ஆகியோர்களின் பெய ர்கள் இடம் பெற்றுள்ளது. புல எண்.498/2 ஏ ல் வாதிகளுக்கும் வண்டித் தட பாத்தியம் உள்ளதால் தான் அவர்களது பெயர்களும் பட்டாவில் இடம் பெற்றுள்ளது என்றால் சரி யல்ல. 1 ம் வாதி எனக்கு கிரையம் கொடுத்த நபர்களிடம் இருந்து 94 செண்ட் நிலத்தை புல எண்.486/1 ல் வாங்கி உள்ளார்கள் என்றால் சரி யல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. நான் கிரையம் வாங்குவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே 1ம் வாதி புல எண்.486/1 ல் 94 செண்ட் நிலத்தை கிரையம் வாங்கி அதன் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரி யல்ல. நான் தான் வாதிகள் கிரையம் பெற்ற பின்னர் மூல பத்திரங்களை பார்க்காமலும் இடத்தை அளந்து பார்க்காமலும் கிரையம் பெற்று விட்டு தற்போது புல எண்.498/2 ஏ நிலத்தில் வாதிகளுக்கு உரிமை இல்லை என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. நான் என்னுடைய முன் விசாரணையில் இடைச் செருகலாக வாதிகளின் பத்திரத்தில் வழித் தடம் அடங்கிய புல எண் சேர்க்கப்பட்டுள்ளதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. பத்திர விதிகளின் படி அவ்வாறு எந்த ஒரு இடைச் செருகல்களையும் செய்ய முடியாது என்றால் சரி யல்ல. வாதிகளுக்கு ஆவணத்தின் படியும் சுவாதீனத்தின் படியும் தாவா

சொத்தில் வழித் தடம் உள்ளது என்று சொன்னால் சரி யல்ல . அதனை அவர்கள் அமைதியான முறையில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரி யல்ல. வாதிகள் தாக்கல் செய்து உள்ள வழக்கை அவர்கள் கோரிய படி தீர்ப்பளிக்க வேண்டும் என்றால் சரி யல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/-G.Gengaraj

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.